[டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்] [1993 ஏப்ரல் 23

இன்றைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, எங்களையெல்லாம் இன்றைக்கு இந்த நிலையிலே அமர வைத்து அழகு பார்த்துக்கொண்டிருக்கிற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய பெயராலே அந்தப் பஸ் ஆரணியிலேயிருந்து பெங்களூருக்குச் செல்வதற்காகவும், அதே நேரத்திலே மக்களிடத்திலே நான் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் இதற்கு முன்பாகவே சொன்னார்கள். நான் பொது மக்களிடத்திலே சொன்னபோது, பொது மக்கள் என்னிடத்திலே சொன்ன ஒன்றை நான் இங்கே சொல்கிறேன். அம்மாவிடத்திலே சொல்லுங்கள்; அம்மா நிச்சயமாக பஸ்ஸை விடுவார்கள் என்று, அவ்வளவு நம்பிக்கையோடு அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அவர்களுடைய நம்பிக்கை வீண் போகாமல், ஆரணியிலேயிருந்து பெங்களூருக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரைத் தாங்கிய பேருந்து ஒன்றை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொல்லுவார்கள். ஆனால், கேளாமலேயே கொடுக்கக்கூடியவர்தான் நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). இதுவே நம்முடைய மாநிலமாக இருந்தால் நாளை காலையிலேயே இந்தப் பேருந்தை இயக்கி விடலாம் என்று சொல்லிவிட முடியும். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான் காலதாமதம் ஏற்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரால் வருகிறபொழுது அந்தப் பேருந்துக்கள் அந்தக் காலக்கட்டத்தில் இயக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

(ஆ) சென்னை நகரத்தில் பஸ் பற்றாக்குறையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. டி. எம். ரங்கராஜன், திரு. எஸ். ஜெயக்குமார் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு டி. எம். ரங்கராஜன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''சென்னை நகரத்தில் பால் பற்றாக்குறை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

அறிக்கை

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், சென்னை நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள நுகர்வோரின் பால் தேவையினை 60 விழுக்காடு முதல் 65 விழுக்காடு வரை நிறைவு செய்கிறது. தற்பொழுது நாள்தோறும் தோராயமாக 7.50 இலட்சம் லிட்டர் பால் வழங்கப்படுகிறது. சென்னை நகரம் அதனுடைய பால் தேவைக்கு மாவட்ட ஒன்றியங்களிலிருந்து வருகின்ற பாலையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. மாவட்டங்கள் அளவில் பால் கொள்முதலை அதிகப்படுத்தவும், சென்னைக்கு அதிகமாக பால் வரச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பால் அட்டைகள் வாங்கியுள்ள அனைத்து நுகர்வோருக்கும் போதுமான அளவு பால் வழங்கப்படுகிறது. ஆவின் பாலின் குறைந்த விற்பனை விலையைச் சாதகமாக்கிக் கொண்டு வியாபார நோக்கோடு மொத்தமாக பால் வாங்கப் படுவதைத் தவிர்க்க தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் மூலம் செய்யப்படும் பால் விநியோகம் சீர்திருத்தப்பட்டுள்ளது. அதிகபட்சம் ஒரு நபருக்கு 2 லிட்டர் பால் மட்டுமே ரொக்கத்திற்கு விற்கப்படுகிறது. மேலும், இந்த தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் காலை 5.00 மணி முதல் செயல்படுமாறு முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால், அதிகாலை நேரத்தில் வியாபார நோக்கத்திற்காக மொத்தமாக பால் விற்கப்படுவதை அந்தந்தப் பகுதியில் வாழும் மக்கள் கண்காணிக்க இயலும். சென்னை நகரில் பால் பற்றாக்குறை என்ற நிலை இல்லை. இருந்தபோதிலும், வருகின்ற பால் வற்றுங்காலத்தில் சென்னைக்கு வரும் பாலின் அளவு குறையும் என்பதால், மேலே விவரிக்கப்பட்ட பால் விநியோகத்திற்கான சீரமைப்பு விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே குறிப்பாக மைலாப்பூர், தி.நகர் ஆகிய பகுதிகளிலே இருக்கின்றவர்களெல்லாம் நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்களெல்லாம் வெளியிடங்களுக்குக் காலையிலே ஐந்தரை மணிக்கெல்லாம் பஸ்ஸைப் பிடித்து வேலைக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கின்றது. அது மட்டு

மல்லாமல், அதிகாலயையிலே 4 மணிக்கெல்லாம் எழுந்து காப்பி குடிக்கின்ற பழக்கம் இவர்களிடத்திலே இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் பல நாட்களிலே காப்பியே குடிக்க முடியாதபடி பால் வாங்கி வருவதற்கு நேரமாகின்ற காரணத்தினால் அவர்கள் காப்பி அருந்தாமலேயே இன்றைக்கு அலுவலகங்களுக்குச் செல்வதோடு மட்டுமல்லாமல், இந்தத் தானியங்கி பால் நிலையத்திலேயெல்லாம் தற்போது காலை 5 மணிக்குத்தான் பால் வழங்கப்படுகிறது. இதனால் அந்தத் தானியங்கிப் பால் நிலையத்திலே பெருத்த கியூ நின்று இரண்டு மணி நேரமாவது அங்கே பால் வாங்வகுதற்காக மக்கள் நிற்கின்ற நிலையைப் பார்க்கிறோம். அதுமட்டுமல்லாமல், இந்த பாக்கெட் பாலெல்லாம் விநியோகம் செய்கின்றபொழுது இந்த பாக்கெட் பாலிலே ஓட்டைகள் இருப்டதால் அதைப்பற்றி வாடிக்கையாளர்கள் அங்கேயிருக்கின்ற அந்த டெப்போ ஏஜன்சியிடம் சொல்லுகின்றபொழுது அவர்கள் சொல்கிறார்கள், நாங்கள் கொடுக்கின்ற பாலை நீங்கள் வாங்கித்தான் செல்ல வேண்டும், அதில் பால் சிந்துவது எங்களுடைய பொறுப்பு அல்ல என்று சொல்லி விடுகிறார்கள். அதுபோன்று சில நேரங்களிலே பால் வண்டி தாமதமாக வருகின்றபொழுது அந்த நேரததிலே அங்கே இல்லை என்று சொன்னாலும் பால் வாங்குபவர்கள் பாலைப் பெற முடியாத நிலையெல்லாம் இருக்கிறது. ஆகவே, இதனையெல்லாம் களைகின்ற விதத்திலே மீண்டும் காலையிலே 4 மணிக்கே குறிப்பாக மைலாப்பூரிலும், தி. நகரிலுமாவது தானியங்கி பால் வழங்கும் நிலையத்தின் மூலமாகப் பால் வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தானியங்கி ஆட்டோமேட்டிக் வெண்டிங் மெஷின் நிறைய வைத்திருக்கிறோம். தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள், இவைகளில் வியாபார நோக்கத்தோடு செயல்படுகின்ற சில பேர் நாம் விலை மிகக் குறைவாக விற்கின்ற காரணத்தால் அதைப் பயன்படுத்தி அங்கே அதிகமான பாலை வாங்கி வெளியே கொண்டு போய் விற்று விடுகிறார்கள் என்ற புகார் அதிகம் இருந்தது. அதனால்தான் விடியற்காலையிலே இருந்தால் இப்படிப்பட்ட தவறுகள் நடப்பதைப் பொது மக்கள் கவனிக்க முடியாமல் போகின்றது என்பதனாலே 5 மணிக்கு விற்கலாம் என்று அதை மாற்றி அமைத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், இரண்டு லிட்டர் பாலுக்கு மேலே ஒரு ஆளுக்கு விற்க வேண்டாமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. சென்னை நகரில் யார் யார் பால் கார்டுகள் வாங்கி வைத்திருக்கிறார்களோ அவர்கள் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பால் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்திருக்கின்றது.

வெளி மாவட்டங்களிலேயிருந்து வருகின்ற பால் குறையாமல் பார்த்துக் கொள்வதற்கு இப்பொழுது பல்வேறு விதமான நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். அடுத்து வருகின்ற சீசன் லீன்

சீசன். இன்னும் பால் குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஏற்கெனவே பால் உற்பத்தியாளர்கள் பால் விலையைஉயர்த்தவில்லை என்று சொன்னால் மே மாதம் பால் கொடுப்பதை நிறுத்தி விடுவோம், சப்ளை செய்வதை நிறுத்தி விடுவோம் என்று இப்பொழுது போராட்டத்திற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்னும் பால் விலையை உயர்த்த வேண்டும், இங்கே வருகின்ற பால் ஒழுங்காக விநியோகம் செய்யப்பட வேண்டும். இதற்காகத் தனியாக இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்ற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி அவர்கள் மிகச் சிறந்த முறையிலே இந்த வேலையைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் திரு ரங்கராஜன் அவர்கள் குறிப்பிட்டதை, மறுபடியும் 4 மணிக்கே அவைகள் திறக்கப்பட வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது, பால் ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டியவர்களுக்குச் சேருமா என்பதில் சந்தேகம் இருக்கின்ற காரணத்தினால் தான் அதை 5 மணியாக்கினோம். இருந்தாலும், அதைப் பரிசீலனை செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே அதிக பட்சமாக ஒரு நபருக்கு இரண்டு லிட்டர் பால் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால், நான் காலையிலே 4 மணிக்கு ஒரு பூத்திலே இன்ஸ்பெக்ஷன் சென்றால் அங்கே ஒரு லிட்டர்தான் கொடுக்கப்படுகிறது. கொடுக்கப்பட்டும், மீதியிருக்கிற ஜனங்கள் திரும்புகின்ற நிலைமை அங்கே இருக்கிறது.

இதைப்பற்றி அங்கே இருக்கிற பூத்தில் விசாரித்தால், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 017 பூத், அசோக்நகரிலே நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் 4 மணிக்குச் சென்று விசாரித்தபோது, முன்பெல்லாம் 1,700 லிட்டர் வழங்கப்பட்டு வந்தது ; ஆனால் தற்போது 1,340 லிட்டர்தான் காலையிலே வழங்கப்படுகிறது ; மாலையிலே எடுத்துக்கொண்டால் 1,100 லிட்டர் வழங்கப்பட்டு வந்தது ; ஆனால், இப்போது 800 லிட்டர்தான் வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். எனவே, 1,700-லிருந்து 1,300 என்று 400 லிட்டர் குறைக்கப்பட்டிருக்கிறது. அது ஏன் அவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது ' இப்போது பால் பற்றாக்குறை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதை நிவர்த்தி செய்து மீண்டும் 1,700 லிட்டர் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், பாக்கெட் பாலை வாங்கிக்கொண்டு போய், குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால், 24 மணி நேரம் கூட இல்லாத நிலைமை இருக்கிறது ; அதனால், நாங்கள் அதை சேஃப்டி பண்ணி வைக்க முடியாத நிலை இருக்கிறது என்று

அங்கே இருக்கிற பொதுமக்கள் கூறுகிறார்கள். இதிலே ஏதாவது 'டெக்னிகல் டிஃபெக்ட்ஸ்' இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலின் விலையை நாம் 6 ரூபாய்க்கு விற்கிறோம். வெளியிலே இருந்து 8 ரூபாய், 9 ரூபாய்க்கு அது விற்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் இதிலே தவறு நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. சிலபேர் இங்கே விற்கிற பாலை அதிகமாக வாங்கிக் கொண்டுபோய் வெளியிலே விற்றுவிடுகிறார்கள். இன்னொரு பக்கம், மாவட்ட ஒன்றியங்களிலிருந்து பால், சென்னைக்கு சப்ளை செய்யப்படுகிறது. அவர்கள் என்ன விலை கொடுத்து அங்கே வாங்குகிறார்களோ, அதைவிட கொஞ்சம் குறைவாகத்தான் விலையை, சென்னையிலே இருக்கிற ஃபெடரேஷன் அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இது நீண்ட நாட்களாக இருக்கிறது. இப்போது, அதை மாற்றியமைக்க வேண்டும். சென்னைக்கு பால் சப்ளை செய்வதால், வேலூருக்கோ, அல்லது சேலத்துக்கோ அல்லது கோயம்புத்தூருக்கோ அல்லது தென்னாற்காடு மாவட்டத்திற்கோ நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் இதிலே தயக்கம் காட்டுகிறார்கள். அவர்களுக்குச் சொல்லி இப்போது விலை மாற்றியமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். அது இன்னும் கொஞ்சம் வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். காரணம் இங்கே இவர்கள் பால் வாங்குவதற்கு பணத்தை சரியாகக் கொடுப்பதில்லை. சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட பணம் மொத்தமாக மாவட்ட ஒன்றியங்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் இந்த பால் கொள்முதல் விலையை அரசு அங்கே இருக்கிற ஒன்றியங்களுக்கு பரிசீலனை செய்து பின்னர் இன்னும் கொஞ்சம் பால் அதிகமாக வருவதற்கு ஏற்றவகையில் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பால் கெட்டுப்போகிறது என்கிற விதத்தில் சொன்னார். அதற்கு நான் உடனடியாக நடவடிக்கை எடுத்து வேண்டியதைச் செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ம. சின்னசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.